2015 பிப்ரவரி 23]

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியும் துவங்கப்படவுள்ளன. இதுதவிர, மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் வருடத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி துவங்க அரசு உத்தரவிட்டிருக்கின்றது. இந்த மருத்துவக் கல்லூரிகளில் இஸ்லாமிய மாணவ, மாணவிகள் சேர்ந்து பயன்பெறலாம். மேலும், ஒரு மருத்துவக் கல்லூரி துவங்க வேண்டும் என்றால், தொடரா செலவினம் என்றும், தொடரும் செலவினம் என்றும், மொத்தத்தில் ரூ.181.08 கோடி நிதி தேவைப்படும். எனவே, தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்குப் போதிய நிதியாதாரம் இல்லாததால் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின்மூலம் மருத்துவக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

60—

மாணவியர் விடுதி

***6213—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரிலுள்ள அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளி மாணவியருக்கு தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை அகவை 67 காணும் மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டிலே தங்களுடைய பிறந்த நாளை ஏழையெளியவர்களுடைய மகிழ்ச்சி நாளாக, வறியவர், முதியவர், மாற்றுத் திறனாளிகளினுடைய மனநிறைவு நாளாக,

மாணவர், இளைஞர், மகளிர், பெரியவர், பொதுமக்கள் என எல்லாத் தரப்பினரும் மனம் குளிரும் வகையில், எல்லாத் தரப்பினரும் மனம் மகிழும் நாளாக மாற்றும் மக்கள் சக்தியின் மகா சக்தி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உலகில் வாழும் உயிர்களை எல்லாம் உறவாய்ப் பேணும் ஓர் உயிரே அம்மா, தங்கள் நிழலில் வாழும் மரமான எந்தன் பிறவிக்கு வாய்த்த பெரும்பேறு என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டத்தில், அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளியில் மாணவியர் தங்கும் விடுதி 5.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரத் துறவி விவேகானந்தரின் மறு அம்சமாய், பனி மலையில் புயல் போன்ற வேகத்துடன் அயராது பணிபுரியும் மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கு உளப்பூர்வமான பிறந்தநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விருதுநகர் மாவட்ட தலைமை மருத்துவமனையை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நிகராகத் தரம் உயர்த்தி, ரூ.6 கோடிக்கு கட்டமைப்பினை மேம்படுத்திய மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி. டிஜிட்டல் எக்ஸ்-ரே, ஸ்கேன் சென்டர், இரத்த அணுக்களைப் பிரித்தெடுக்கும் கருவி ஆகியவற்றை ரூ.2 கோடியில் அமைத்துக் கொடுத்தமைக்கும் நன்றி. எரிச்சநத்தம், வடமலாபுரம், அழகாபுரி, செங்குன்றாபுரம் ஆகிய நான்கு இடங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்துக் கொடுத்தமைக்கும், கன்னிசேரிபுதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்திக் கொடுத்தமைக்கும் நன்றி. விருதுநகரில் 25 வருடங்களுக்கும் மேலாகச் செயல்படாமல் இருந்த அண்ணாமலையம்மாள் மகப்பேறு மருத்துவமனையை முழுமையாகச் செயல்பட வைத்த இந்த அரசுக்கு நன்றி.

2015 பிப்ரவரி 23]

அனைத்துக்கும் மேலாக, கல்வித் தரத்தில் தமிழகத்தில் முதலிடத்தில் இருக்கும் விருதுநகரில் நடந்துகொண்டிருக்கும் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளியில் படிக்கும் மாணவிகளின் துயரம் தீர்க்க ரூ.5.32 கோடி மதிப்பீட்டில் அனைவருக்கும் தங்கும் விடுதி தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் கூறிவிடுகிறேன். பொருளாதாரம் மற்றும் கல்வி ஆகிய இரண்டிலும் விருதுநகர் மாவட்டம் இன்று முன்னோடியில் இருந்தாலும், சுகாதாரம் மற்றும் மருத்துவத்தில் சற்று பின்தங்கியிருக்கின்றது. ஒவ்வொரு வருடமும் ஒரு மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி தந்துகொண்டிருக்கும் இந்த அரசுக்கு நன்றி. நான் பல வருடங்களாகக் கேட்டுக்கொண்டு வரும், விருதுநகர் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரியினை இந்த வருடமாவது உருவாக்க வாய்ப்பு உள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-35

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, சுகாதாரக் குறியீடுகளில் தமிழகம் இந்திய அளவில் முதன்மை மாநிலமாக மட்டுமல்லாமல், முன்னோடி மாநிலமாகவும் சுகாதாரக் குறியீடுகளின் இலக்கை அடைந்திருக்கக்கூடிய மாநிலமாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதல்களின்படி செயல்பட்டு வருகிறது. அந்தவகையில், விருதுநகர் மாவட்டத்தினுடைய மாவட்டத் தலைமை மருத்துவமனையை, மருத்துவக் கல்லூரிக்கு இணையான மருத்துவமனையாகத் தரம் உயர்த்த, அரசாணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. செவிலியர் பயிற்சிப் பள்ளியைப் பொறுத்தமட்டில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியான 2005-ல் இது வழங்கப்பட்டது. அந்த எண்ணிக்கையும் வரும் ஆண்டுகளிலிருந்து 100 மாணவிகளாக *த்தப்படும், 5.32

கோடி ரூபாயிலே இப்போது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இந்த ஆண்டு அந்தக் கட்டடம் கட்டுகின்ற பணிகளும் நிறைவேற்றப்படும். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் கேட்டதுபோல ஒவ்வோர் ஆண்டும் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி வழங்குகின்ற சிறப்பான கொள்கை முடிவினை; திட்டத்தைத் தீட்டி நிறைவேற்றுகின்ற பணியை மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். விருதுநகர் மாவட்டத்தை, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கவனத்தில் கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இந்தக் கோரிக்கையை, சந்தன பூமியில் வெந்திருக்கும் மக்களுக்காக இதயம் கனிந்து, விருதுநகரில் உறுதியாக மருத்துவக் கல்லூரி அமைய, கூடியவிரைவில் பரிசீலிக்கப்படும் என்று உறுதியளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Zero hour-ல் ஒன்றும் raise செய்ய வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோம். திரும்பத் திரும்ப எழுந்து கேட்டுக்கொண்டிருந்தால் எப்படி? சொல்லுங்கள். என்ன? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* **

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*